**2026**
**யூன்**

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்
## தயாரிப்பு மற்றும் பணிகள்

STATISTICS DEPARTMENT
CENTRAL BANK OF SRI LANKA

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள், 2026 யூனில் தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிலும் விரிவடைதல்களை எடுத்துகாட்டுகின்றன**

**தயாரிப்பிற்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – தயாரிப்பு), 2026 யூனில் 53.0 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்தது.** இது முன்னைய மாதத்தை விட மெதுவான வேகத்திலேனும் தயாரிப்பு நடவடிக்கைளில் தொடர்ச்சியான விரிவடைதலை எடுத்துக்காட்டுகின்றது.

புதிய கட்டளைகள் துணைச் சுட்டெண் நடுத்தர அடிப்படை அளவில் காணப்படுவதுடன் முன்னைய மாதத்திலிருந்து யூனில் உள்வருகின்ற கட்டளைகள் பரந்தளவில் மாற்றமின்றிக் காணப்பட்டன. உணவு மற்றும் குடிபானத் துறை தயாரிப்பினால் உந்தப்பட்டு, உற்பத்தி துணைச் சுட்டெண் தொடர்ந்தும் விரிவடைந்தது. தொழில்நிலை துணைச் சுட்டெண் முன்னைய மாதத்தில் இருந்ததைப் போன்று பணிக்கமர்த்தும் போக்குகளை எடுத்துக்காட்டி, நடுத்தர அடிப்படை அளவை அண்மித்துக் காணப்பட்டது. எனினும், தொடர்ச்சியான தேர்ச்சிமிக்க தொழிலாளர் பற்றாக்குறைகள் மற்றும் உயர்வடைகின்ற தொழில் செலவுகள் என்பவற்றை முக்கிய சவால்களாக பல பதிலிறுப்பாளர்கள் எடுத்துக்காட்டினர். தளம்பல்மிக்க நிரம்பல் சூழ்நிலைக்கு மத்தியில் கையிருப்பைக் கட்டமைப்பதற்கான நிறுவனத்தின் முயற்சிகளைப் பிரதிபலித்து கொள்வனவுகள் துணைச்சுட்டெண்ணின் இருப்பு யூனில் மேலும் அதிகரித்தது. அதேவேளை, நிரம்பலர் விநியோக நேர துணைச்சுட்டெண் யூனில் தொடர்ந்தும் நீட்சியடைந்தது.

***கொமுசு தொகுப்பு - தயாரிப்பு அளவீடு***


| மாறி | மே | யூன் | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு – தயாரிப்பு** | **56.6** | **53.0** | **-** | **அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 52.6 | 50.0 | - | அதிகரிப்பிலிருந்து நடுநிலை |
| உற்பத்தி | 54.6 | 52.0 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 59.7 | 50.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 52.6 | 56.6 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 66.3 | 61.6 | - | நீட்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

மத்திய கிழக்கில் மோதலுடன் தொடர்புபட்ட சவால்மிக்க சூழலினால் பிரதானமாக மிதமடைந்திருந்த போதிலும், தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் சாதகமாகக் காணப்பட்டன.

**கொ.மு.சு**
**தயாரிப்பு**
**2026 யூன்**
**53.0**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு:**
**கொமுசு தயாரிப்புத் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| இந்தியா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| சீனா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| யூரோ வலயம் | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2026 யூலை 15அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1]எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**பணிகளுக்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – பணிகள்), 2026 யூனில் 58.5 சுட்டெண் பெறுமதியைப் பதிவுசெய்து, முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் பணிகள் நடவடிக்கைகளில் தொடர்ச்சியான விரிவடைதலினை எடுத்துக்காட்டுகின்றது**

பரந்தளவிலான துறைசார் மேம்பாடுகள் மூலம் துணையளிக்கப்பட்டு, 2026 யூனில் வியாபார நடவடிக்கை விரிவடைந்தது. காப்புறுதித் துறையில் குறிப்பிடத்தக்களவிலான பெறுகைகளுடன் இணைந்து, நிதியியல் மற்றும் தொழில்துறைசார் பணிகள் துணைத் துறைகளினால் வளர்ச்சியானது முதன்மையாக உந்தப்பட்டது.

நிதியியல் பணிகள் துறையின் மூலம் முதன்மையாக வழிநடத்தப்பட்டு, புதிய வியாபாரங்கள் 2026 யூனில் வளர்ச்சியடைந்தன. காப்புறுதி, தொழில்துறைசார் பணிகள் மற்றும் ஏனைய தனிப்பட்ட பணிகளும் விரிவடைதலுக்குப் பங்களித்தன.

பல்தரப்பட்ட கம்பனிகள் தமது தொழிற்படையை விரிவுபடுத்தியமையால் 2026 யூனில் தொழில்நிலை அதிகரித்தது. அதேவேளை, மேயில் வீழ்ச்சியடைந்து காணப்பட்டிருந்த நிலுவையிலுள்ள பணிகள் துணைச் சுட்டெண் நடுத்தர அடிப்படை அளவை அடைந்ததனால் யூனில் நிலையாகக் காணப்பட்டன.

***கொமுசு தொகுப்பு - பணிகள் அளவீடு***


| மாறி | 2026 மே | 2026 யூன் | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)** | **56.9** | **58.5** | **+** | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| புதிய வியாபாரங்கள் | 58.0 | 62.5 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 49.4 | 54.0 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிப்பு |
| நிலுவையிலுள்ள பணி | 48.1 | 50.0 | + | வீழ்ச்சியிலிருந்து நடுநிலை |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 64.7 | 72.7 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

எதிர்பார்க்கப்படும் பொருளாதார மேம்பாடுகள் மற்றும் எதிர்வரும் கண்டி எசல பெரஹர பருவகாலத்தினால் பகுதியளவில் உந்தப்பட்ட சுற்றுலா வருகைகளில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பு என்பவற்றினால் தூண்டப்பட்டு அடுத்த காலாண்டிற்கான வியாபார நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் சாதகமாகக் காணப்பட்டன. எனினும், பரந்தளவிலான உலகளாவிய நிச்சயமற்றதன்மைகள் இவ்வளர்ச்சிக்கான இடர்நேர்வுகளை இன்னும் ஏற்படுத்துகின்றன.

**கொ.மு.சு**
**பணிகள்**
**வியாபார நடவடிக்கைச் சுட்டெண்**
**2026 யூன்**
**58.5**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு பணிகளின் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| இந்தியா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| சீனா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| யூரோ வலயம் | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்', 2026 யூலை 15 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**முறையியல்**

வினாக்கொத்துக்கள் தொடர்ந்துவருகின்ற மாதத்தின் முதலரையில் நிறைவுசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாறிலிக்காகவும் முன்னைய மாதத்துடன் ஒப்பிட்டு அதிகரிப்பை, வீழ்ச்சியை அல்லது மாற்றமின்மையை அறிக்கையிடுமாறும் ஏதேனும் மாற்றங்களுக்கான காரணங்களை வழங்குமாறும் பதிலிறுப்பாளர்கள் கேட்கப்படுகின்றனர். சுட்டெண் தொகுப்பும் சுட்டிகள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி. குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

**கொமுசு – தயாரித்தல்,** தயாரித்தலுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகக் கருதப்படுகின்ற இது புதிய கட்டளைகள், வெளியீடு, தொழில்நிலை, நிரம்பலர் விநியோக நேரம் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரியொன்றாகும். பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பது, பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கமைவாக பணிகளுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். இது, **கொமுசு – பணிகள்** எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது. பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண்ணுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.